Registered as a Newspaper

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 வைகாசி 20 செவ்வாய்க்கிழமை (03-06-1997) UTHAYAN - A Lively National Tamil Daily ஒளி: 187

# ஈழத் தமிழர் ஆதரவு ஹர்த்தாலில் தி.மு.க. கலந்து கொள்ளமாட்டாது!

## கருணாநிதி அறிவிப்பு

சென்னை, ஜூன் 3

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக எதிர் வரும் வெள்ளிக்கிழமை தமிழகத்தில் பெரிய அளவில் நடத்தப்படவிருக்கும் ஹர்த்தாலில் மாநிலத்தில் ஆட்சியிலிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் பங்குபற்றமாட்டாது.

அக்கட்சியின் தலைவரும் தமிழக முதல் வருமான மு. கருணாநிதி இதனை நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

ஸ்ரீலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைகளினால் ஈழத் தமிழர்கள் அவலப்படுவதை உலகுக்கு எடுத்துக் காட்டும் வகையிலும்— அத்தகைய போக்குக்கு எதிரான தமிழக மக்களின்

(8 ஆம்பக்கம் பார்க்க)

## சடலத்தைப் புலிகள் பொறுப்பேற்றனர்

மட்டக்களப்பு சந்திவெளிப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஊடாக படையினர் ஒப்படைத்த சடலத்தை விடுதலைப்புலிகள் பொறுப்பேற்றுள்ளனர்.

தமது இயக்க உறுப்பினரின் சடலம் அல்ல என்று கூறி அச் சடலத்தைப் பொறுப்பேற்க முதலில் மறுப்புத் தெரிவித்து திருப்பி அனுப்பிய புலிகள் பின்னர் செஞ்சிலுவைக் குழுவினருடன் தொடர்பு கொண்டு அச் சடலத்தைப் பெற்றுத்தருமாறு கோரியதை அடுத்து மீண்டும் சடலம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

செங்கலடி — பதுளை வீதியில் இலுப்பையடிச் சேனையில் உள்ள புலிகளின் அரசியல் துறைப் பணிமனையில் வைத்து செஞ்சிலுவை சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் சடலத்தைக் கையளித்தனர்.

சந்திவெளிப் பகுதிப் பொறுப்பாளர் பிரபா என்பவரது சடலமே அது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்திவெளிப் பகுதியில் கடந்த சனியன்று சிங்களவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து அப் பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் இவரைச் சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-21)

## ஓமந்தையில் இரு புலிகள் உயிரிழப்பு

வவுனியா, ஜூன் 3

கடந்த வெள்ளியன்று ஓமந்தைப் பகுதியில் அரசபடைகளுடன் நடந்த சண்டையில் லெப்டினன்ட் மகேஷ், மேஜர் உதயகாந்த் ஆகிய தமது போராளிகள் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை அறிவித்தனர்.

கடந்த 17ஆம் திகதி நடந்த சண்டையில் தங்கப்பா, தமிழழகன் ஆகியோரும்—

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடந்த சமரில் லெப்டினன்ட் சிவா, மேஜர் அசோக் ஆகியோரும்—

உயிரிழந்ததாக புலிகள் மேலும் அறிவித்தனர். (உ-21)

## தனங்களப்பில் மோதல் சிப்பாய்பலி! ஐவர்காயம்!

கொழும்பு, ஜூன் 3

யாழ்ப்பாணம் தனங்களப்பு பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் பலியானார். ஐவர் காயமடைந்தனர்.

ரோந்து சென்ற படையினர் விடுதலைப் புலிகளை எதிர் கொண்டபோது அங்கு மோதல் இடம் பெற்றதாகவும் —

படையினர் தாக்குதல் நடத்தியதை அடுத்துப் புலிகள் பின்வாங்கி விட்டதாகவும் நடவடிக்கை தலைமையகம் அறிவித்தது.

இதேவேளை — கிளாலி கடலில் விடுதலைப் புலிகளின் படகுகளை அவதானித்த கடற்படையினர் கனகர ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தியதாகவும் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (ஐ)

# கிழக்கில் புலிகள் அதிரடி ஒன்பது பொலீஸார் பலி!

மட்டக்களப்பு ஜூன் 3

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச் சேனைப் பகுதியில் உள்ள களுவான்கேணி சந்தியில் நேற்று மாலை 5-30 மணியளவில் விடுதலைப் புலிகள் மறைந்திருந்து தாக்குதல் நடத்தியதில் ஒரு சப் இன்ஸ்பெக்டர் உட்பட ஒன்பது பொலீஸார் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்; மற்றும் மூன்று பொலீஸார் காயமடைந்தனர்; பொலீஸாரின் ஆயுதங்களை விடுதலைப் புலிகள் அள்ளிச் சென்றனர்.

நேற்று மட்டக்களப்பு — பொலன்னறுவைப் பாதையில் படையினரின் வாகன அணி செல்லும் நாளாகும்.

வாகன அணி செல்லும் நாளன்று காலையில் மட்டக்களப்பிலிருந்து பொலன்னறுவைக்கும் மாலையில் பொலன்னறுவையிலிருந்து மட்டக்களப்புக்கும் படையினரின் வாகன அணித் தொடர் செல்வது

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சம்பவம் நடந்த இடம் நோக்கி விடாது படையினர் ஷெல் வீச்சு

### இளம் பெண் பலி! பலர் காயம்!!

மட்டக்களப்பு, ஜூன் 3

களுவங்கேணிச் சந்தித் தாக்குதலை அடுத்து படையினர் அப்பகுதியை நோக்கி விடாது ஷெல் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருந்ததாக நேற்றிரவு எமது மட்டக்களப்புச் செய்தியாளர் தெரிவித்தார்.

விடாது முழங்கும் ஷெல் குண்டு வெடிப்புகள் மற்றும் துப்பாக்கி வேட்டுக்களால் பல அப்பாவிப் பொதுமக்கள் இறந்திருக்கக் கூடும் என அஞ்சப்பட்டது. எனினும் மக்களுக்கு ஏற்பட்ட சேதம் குறித்து முழு விவரங்களையும் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

அப்பகுதியில் வீடு ஒன்றில் வீழ்ந்த ஷெல்லினால் வீட்டில் இருந்த இளம் யுவதி ஒருவர் உயிரிழந்தார். அவரின் சடலம் வாழைச்சேனை ஆஸ்பத்திரிக்கு நேற்றிரவு எடுத்துவரப்பட்டிருந்தது.

அந்த வீட்டிலிருந்த மற்றும் நான்கு பேர் ஷெல்லினால் படுகாயமடைந்தனர். அவர்கள் வாழைச்சேனை ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ-21)

## மின் கம்பிகள் நாசம் பெரும் பகுதி இருளில்

மட்டக்களப்பு, ஜூன் 3

வாழைச்சேனை களுவாங்கேணிச் சந்தியில் நேற்று மாலை விடுதலைப் புலிகள் மறைந்திருந்து பொலீஸார் மீது நடத்திய தாக்குதலையும் அதனைத் தொடர்ந்து அரசுப் படைகள் பதில் தாக்குதல் நடவடிக்கையாக மேற்கொண்ட ஷெல், பீரங்கி வீச்சுக்களாலும் மின் விநியோகக் கம்பிகள் அறுந்து வீழ்ந்தன. இதனால் வாழைச்சேனைப் பகுதியில் இருந்து மட்டக்களப்பு நகரப் பகுதி வரையான பெரும் பிரதேசம் நேற்றிரவு இருளில் மூழ்கியது.

பல இடங்களில் மின் விநியோகத் தூண்களும் முறிந்து வீழ்ந்துள்ளன

## மஹர சிறையில் மகனை அனுருத்த சந்தித்தார்

கொழும்பு, ஜூன் 3

பப்புவா நியூகினி நாட்டைச் சேர்ந்த றக்பி விளையாட்டு வீரர் கொழும்பில் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கும் தமது மகன் லொஹான் ரத்வத்தையை, பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை நேரில் சென்று சந்தித்தார்.

லொஹான் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மஹரா சிறையில் இச்சந்திப்பு கடந்த வெள்ளியன்று இடம்பெற்றது.

சிறைச்சாலை வளாகத்தில் சில நிமிட நேரம் தமது மகனுடன் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை உரையாடினார். (உ-21)

## ஓமந்தைபகுதிவீடுகளில் உடைமைகள் சூறை!

### சிங்களக் கிராமததல அவை மீட்பு

வவுனியா, ஜூன் 3

ஓமந்தைப் பிரதேசம் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் வந்த பின்னர் அங்குள்ள வீடுகளில் இருந்து இரண்டு, மூன்று லொறிகளில் ஏற்றிச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் வீட்டுப் பாவனைப் பொருள்கள் மற்றும் விலையுயர்ந்த மரத் தளபாடங்கள் போன்றவை வவுனியா மாமடுவ சிங்களக் கிராமப் பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து மீட்கப்பட்டிருக்கின்றன.

மேற்படி சிங்களக் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் சிலர் கொடுத்த தகவலை அடுத்து பொலீஸார் நேற்று முன்தினம் இந்தப் பொருள்களை மீட்டதாக செய்தி வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

சீருடை தரித்த சிலரே இந்தப் பொருள்களைக் கடத்தி வந்ததாகவும் கூறப்பட்டது.

## கப்பல் சேவை இன்று இல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 3

காங்கேசன்துறையில் இருந்து திருமலைக்கு இன்று நடைபெறுவதாக இருந்த கப்பல் சேவை நிறுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்

யாழ். மாவட்ட அரச அதிபர்

## திரு. செ. பத்மநாதன்

அவர்களின் நற்பணிகளை நயந்து பேசும் நன்னாளில் அவர் நிறைவுடன் நீடூழி வாழ்ந்து, நற்சேவைகள் பல நயம்படவே புரிந்து நன்மகனாய் நாடு போற்ற வாழ்க என வாழ்த்துகின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.

(சி/856)



# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

O/L வகுப்புகளுக்கு
தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்

பிரிவு II

**O/L DAY CLASS** [8-00 - 2-00]

ஆரம்பம்: 06 - 06 - 97

★ 23 ஆண்டுகளாகக் கடமை, கட்டுப்பாடுடன் நடத்தும் ஒரே நிறுவனம்.
★ வாரத்தில் 6 நாள்களும் அனைத்துப் பாடங்களும் நடைபெறும்.
★ மாதாந்தப் பயிற்சிப் பரீட்சை நடைபெறும்.
★ ஒவ்வொரு பிரிவிற்கும் 50 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

(47592)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1997 06-15 வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. தற்காலிக விரிவுரையாளர் - கணிதமும் புள்ளி விவரவியலும்/ லிலங்கியல்/ இரசாயனவியல்.
2. தற்காலிக செயன்முறைக் காட்டுனர் - தாவரவியல் / விலங்கியல்
3. தற்காலிக போதனாசிரியர் - கணிதமும் புள்ளி விவரவியலும் / கணணித் துறை

**சம்பள அளவுத்திட்டம்:**

1 தற்காலிக விரிவுரையாளர்: ரூபா 8,833.75 மாதமொன்றுக்கு.
2. தற்காலிக செயன்முறைக் காட்டுனர்/ போதனாசிரியர் ரூபா 6 980.83 மாதமொன்றுக்கு.

**தகைமைகள்:-**

1. தற்காலிக விரிவுரையாளர்;

1 பொருத்தமான பாடத்தில் சிறப்புப் பட்டமொன்றில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவு)

அல்லது

2 பொருத்தமான பாடத்தில் சிறப்புப் பட்டமொன்றில் இரண்டாம் வகுப்பு (கீழ்ப்பிரிவு)

அல்லது

3 பொருத்தமான பாடத்தில் சிறப்புப் பட்டத்துடன் பொருத்தமான துறையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் படிப்பில் சித்தி

அல்லது

4 உயர்கல்வி நிறுவனத்தின் சிபார்சின்படி பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறு இத்தகைய வேறு தகைமைகள்.

2. தற்காலிக செயன்முறைக் காட்டுனர்/ போதனாசிரியர்:

1 பட்டத்தில் பொருத்தமான பாடத்தை ஒரு பாடமாகக் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி.

பெறுபேறுகளுக்காகக் காத்திருப்போரிடமிருந்தும் பெறப்படும் விண்ணப்பங்களும் பரிசீலனை செய்யப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளின் விசேட தகைமைகள்/அனுபவத்தைக் கருத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

விண்ணப்பப்படிவங்களையும் இதர விவரங்களையும் மக்கள் வங்கியின் யாழ். நவீன சந்தைக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப் பல்கலைக்கழக தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர்/ நிதியாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையுடன் 23 × 10 ச.மீ. அளவுடைய சுயமுகவரியிடப்பட்ட ரூபா 2.50 முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல்வேண்டும்.

விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**- பதிவாளர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
1997-4-28

(சி/853)

## அவசர கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

சைதானோர், காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளதாக சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## நியமனக் கடிதங்கள்

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்த அறுபது வயதுக்குட்பட்டவர்களுக்குரிய நியமனக் கடிதங்கள் இன்று யாழ் கல்வி வலயம்-1 பணிமனையில் வழங்கப்படும் என்று கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(ஐ)

## மாணவருக்கு அழைப்பு

கடந்த 21 ஆம் திகதி ஆரம்பமான கல்விச் சுற்றுலாவில் பங்குபற்றிய வலயம்-1, வலயம்-2 ஆகியவற்றைச் சேர்ந்த ஜி.சி.ஈ. உயர்தர மாணவர்களை எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை வலயம்-1 பணிமனைக்குச் சமுகமளிக்குமாறும் மாணவர்களுடன் சென்ற பிரதி இணைப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரையும் அங்கு வருகை தருமாறும் வலயம்-1 கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஐ)

## பல்கலை. ஊழியர் எச்சரிக்கை

பல்கலைக்கழகக் கல்வி சாரா ஊழியர்கள் தொடர்பாக இணக்கம் காணப்பட்ட விடயங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்தா விட்டால் மீண்டும் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் வேலை நிறுத்தத்தில் குதிக்கப் போவதாகப் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர் சம்மேளனம் அறிவித்துள்ளது.

ஒய்வூதியம், சம்பள உயர்வு தொடர்பான விடயங்கள் குறித்து இணக்கம் காணப்பட்டிருப்பதாகச் சம்மேளன வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-150-3)

## கூட்டம்

வேலணை சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேலணையில் பாடசாலையின் புதிய அமைவிடத்தில் நடைபெறும். (இ-4)


எமது ஒறிஜினல் வெளியீடுகள்

★ அடிமைச்சங்கிலி
★ பிஸ்தா
★ கட்டப்பஞ்சாயத்து

பிரதி ஒன்று 350 ரூபா

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.
(47597)



**NEW SCIENCE ACADEMY**
NALLUR, JAFFNA.

கணக்கியல்
பாலவாசன்

**97 A/L**
கிரயக்கணக்கீடு
04 - 06 - 97

பிரிவு:-
I 6-30 - 7-30 TUE
II 8-00 - 9-00 WED THU

(47596)


## கோப்பாயில் கிரனேட் வீச்சு

யாழ்ப்பாணம், ஜூன் 3

கோப்பாய் பழைய பிரதேச செயலர் அலுவலகத்துக்கு அண்மையில் நேற்று முன்தினம் கிரனேட் வீச்சுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் படையினர் தரப்பில் ஒருவர் காயமடைந்ததாகத் தெரிய வருகிறது (ஐ-15)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பார்வதி இராசலிங்கம்

கே. கே. எஸ் வீதி, இணுவிலைச் சேர்ந்த திருமதி பார்வதி இராசலிங்கம் 2 - 6 - 1997 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசலிங்கத்தின் அன்பு மனைவியும், சொர்ணலிங்கம் (சவூதி அரேபியா), பஞ்சலிங்கம் (பொலீஸ் திணைக்களம், கொழும்பு), குணலிங்கம் (முன்னாள் இ. போ. ச. உத்தியோகத்தர்), திருமதி இராஜேஸ்வரி கருணானந்தராஜா (யாழ். பல்கலைக்கழகம்), தியாகலிங்கம் (போதனா வைத்தியசாலை, குருநாகல்), செல்வி சொர்ணம், யோகலிங்கம் (முன்னாள் W. T. O பொலீஸ் திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், க. கருணானந்தராஜா (யாழ். பல்கலைக்கழகம்), திருமதிகள் சிவனேசமணி சொர்ணலிங்கம், பத்மாவதி பஞ்சலிங்கம், சரோஜா குணலிங்கம், சந்திராணி யோகலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும், சண்முகேஸ்வரன் (ஜேர்மனி), வத்சலா, வாசுகி (ஆசிரியை, தாவடி தமிழ்க்கலவன் பாடசாலை), கௌதமி, திருமதிகள் சுபோதினி சிவகுமார் (கொழும்பு), வினோதினி சிவபாலன் (கனடா), கிரிதரன் (பொறியியலாளர் கனடா), விஜித்தா, சஞ்ஜீவனி, பிரதாபன், விஜித்தா, பிரஷாந்தன், சஜீவ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அர்ச்சனா, வைஷ்ணவியின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 2 - 6 - 1997 அன்று பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. கருணானந்தராஜா
(மருமகன்)

லிங்க வாசா,
கே. கே. எஸ். வீதி,
இணுவில்.

(சி/851)

## திருமதி நவமணி மில்ஸ்

திருமதி நவமணி மில்ஸ் 31 - 05 - 97 அன்று ஆஸ்திரேலியாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற போதகர் ஜெயம் மில்ஸ் அவர்களின் அன்பு மனைவியும் ஜீன், ஈஸ்டரீன், குலம், பிரேம், கிறிஸ்ரி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம், லூதர் துரைசிங்கம், டாக்டர் லூதர் குணரட்ணம், லூதர் செல்வராஜா மற்றும் சிரோன்மணி இராஜரட்ணம், லூதர் ராஜரட்ணம், றோசமலர் பாலகிருஷ்ணன் ஆகியோரின் சகோதரியுமாவார்.

நல்லடக்கம் 02 - 06 - 97 அன்று ஆஸ்திரேலியாவில் நடைபெற்றது.

தகவல்:
சுஜனி இராஜதேவன்
(மருமகள்)

Mrs. Sironmani Rajaratnam
50/2, Perere Ave,
Kohuwela.

(47595)

## சதாசிவம் சரவணமுத்து

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரான சதாசிவம் சரவணமுத்து (மாட்டு வைத்தியர்) 02 - 06 - 1997 காலை 10 மணியளவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும், சண்முகநாதன், சிவசோதி, சிவதேவி, ஸ்ரீரஞ்சிதேவி, ஸ்ரீஞானதேவன், செகருணநாதன் (சங்கு), சீர்திமாலா (சுவிஸ்) ஆகியோரின் அருமைத் தந்தையும், கமலாவதி, ஜெயதாஸ், இலட்சுமணன், இந்திரலோகநாதன் (ஜேர்மன்), சறோஜினிதேவி, சரவணபவானி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் செவ்வாய்க் கிழமை 03 - 06 - 97 காலை 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊற்றல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
பிள்ளைகள்

கைதடி வடக்கு. (47594)

## திருமதி மாணிக்கம் வைத்திலிங்கம்

திருநெல்வேலி பத்திரகாளி கோயிலடியைச் சேர்ந்த திருமதி மாணிக்கம் வைத்திலிங்கம் அவர்கள் 2-6-97 அன்று வவுனியாவில் காலமானார்.

இவர் அமரர் வைத்திலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், அமரர் சத்தியசீலன், சத்தியநாதன், விமலாவதி, சத்தியபாலன், சத்தியராசன், நந்தினிதேவி, சத்தியரூபன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் வவுனியாவில் நடைபெற்றன. அஞ்சலி நிகழ்வுகள் இன்று அவரது திருநெல்வேலி இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
திருமதி இ. விமலாதேவி
(மகள்)

பத்திரகாளி கோயிலடி,
திருநெல்வேலி.

(47598)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சியராலியோன் தலைநகர் மீது கடற்படை பீரங்கித் தாக்குதல்

## நைஜீரியா தலைமையில் ஆபிரிக்க நாடுகள் நடவடிக்கை

பிரீரவுண், ஜூன் 3

சியராலியோனின் தலைநகர் பிரீரவுண் நேற்று திடீர் என கடற்படையின் பீரங்கித் தாக்குதலுக்கு உள்ளானது.

நைஜீரியா தலைமையிலான மேற்காபிரிக்க நாடுகளின் கடற்படைப் படகுகள் அணி இத்தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சியராலியோன் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக சிம்பாபேயின் தலைநகர் ஹரரேயில் தற்பொழுது ராஜதந்திர ரீதியான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை முற்றிலும் எதிர்பாராத வகையில் தலைநகர் பிரீரவுண் கடற்படையின் பீரங்கித் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கிறது.

சியராலியோனில் ஒரு வாரத்துக்கு முன்னர் இராணுவம் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றி இருந்து.

ஒரு வருடத்துக்கு முன்னர் பதவியில் அமர்ந்த மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் கவிழ்க்கப்பட்டு பிரதமர் கபா வெளிநாடு ஒன்றில் தஞ்சம் அடைந்தார்.

சியராலியோனில் மீண்டும் சிவில் ஆட்சியை ஏற்படுத்தும் படியும் —

ஆட்சியைக் கைப்பற்றிய இராணுவத் தலைவர்களை வெளியேறுமாறும் ஐ. நா. பொதுச் செயலாளர் கோபி அனான் மற்றும் உலக நாடுகளின் தலைவர்கள் பலர் கோரி இருந்தனர்.

தலைநகர் பிரீரவுணில் இராணுவ ஆட்சியாளர்கள் நேற்று புதிய புரட்சிக் கவுன்ஸில் ஒன்றை அமைத்த சமயம் தலைநகர் கடற்படைத் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கிறது.

இதற்கிடையில் ஹராரேயில் நேற்று ஆரம்பமான ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தின் உச்சிமாநாட்டில் சியராலியோன் பிரச்சினை முக்கிய இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொங்கோ அதிபர் லோறன் கபீலாவும் இந்த உச்சி மாநாட்டில் கலந்து கொள்கிறார். பதவி ஏற்ற பின்னர் அவரின் முதலாவது வெளிநாட்டுப் பயணம் இது ஆகும். (இ)

## கொங்கோவில் படையினர் துப்பாக்கிச் சூடு

புஜு்ம்புரா ஜூன் 3

கொங்கோ துருப்புக்கள் கொங்கோவின் கிழக்குப் பகுதி நகரான உவிராவில் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பலர் கொல்லப்பட்டதாக மனித உரிமைக் குழுக்கள் தெரிவிக்கின்றன.

அரச எதிர்ப்பு நடத்தியவர்கள் மீதே கொங்கோ துருப்புகள் சுட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கபீலாவின் அரசுக்கு எதிர்க்கட்சி தரப்பில் இருந்து கணிசமான எதிர்ப்பு இருந்து வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

(இ)

## ஈரான்- ஈராக் அரசுகள் சடலங்கள் பரிமாற்றம்

பாக்தாத், ஜூன் 3

ஈரான்—ஈராக் யுத்தத்தில் இறந்த சிப்பாய்களின் சடலங்களை ஈரானும் ஈராக்கும் பரிமாற்றம் செய்து கொண்டுள்ளன.

20 ஈரானிய சிப்பாய்களின் சடலங்களை ஈராக்கும்—

87 ஈராக்கிய சிப்பாய்களின் சடலங்களை ஈரானும் பரஸ்பரம் கையளித்துள்ளன.

1980 ஆம் ஆண்டு ஆரம்பமான ஈரான்—ஈராக் யுத்தம் 1988 ஆம் ஆண்டுவரை நீடித்தது.

இந்த யுத்தத்தில் 10 லட்சம் படையினர் வரை கொல்லப்பட்டிருந்தனர். (இ)

## எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் கென்யாவில் வீட்டுக்காவலில்!

நைரோபி, ஜூன் 3

கென்யாவில் பல முன்னணி எதிர்க்கட்சி அரசியல்வாதிகளைப் பொலீஸார் வீட்டுக்காவலில் வைத்துள்ளனர்.

அரசியல்வாதிகளின் வீடுகள் அதிகாலையில் பொலீஸாரினால் சுற்றிவளைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கென்யாவில் அதிபர் டானியல் அரம்போஹா பங்குபற்றும் பேரணி ஒன்றை எதிர்க்கட்சி அரசியல் வாதிகள் குழப்பலாம் என்று அரசு கருதுகிறது. (இ-5)

## வெளிநாட்டில் வேலை செய்ய பாக். பெண்களுக்குத் தடை!

லாகூர், ஜூன் 3

பாகிஸ்தான் பெண்கள் வெளிநாடுகளில் வேலை செய்வதற்கு பாகிஸ்தான் அரசாங்கம் தடை விதித்துள்ளது.

இந்தத்தடை காரணமாக மலேஷியாவில் கடமையாற்றிய 25 பாகிஸ்தான் பெண்கள் திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர். (இ)

## றுவாண்டா அகதிகள் கொலை: கொங்கோ அரசு மறுக்கிறது

கின்ஸாசா, ஜூன் 3

கொங்கோவில் றுவாண்டா அகதிகள் படுகொலை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களை கொங்கோ அரசு மறுத்துள்ளது.

ஐ. நா. உறுப்பு நாடுகள் சில இத்தகைய குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதாகவும் —

இதில் எந்தவித உண்மையும் கிடையாது என்றும்— கொங்கோ அரசின் தகவல் அமைச்சர் நேற்று வானொலி உரையில் தெரிவித்தார்.

கொங்கோவில் உள்ள டுட்சி இன அகதிகளின் உதவியுடன் லோறன் கபீலா கொங்கோவில் ஆட்சியைக் கைப்பற்றியது தெரிந்ததே.

ஹுட்டு இனத்தவர்களே தற்பொழுது படுகொலைக்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## சுரங்கத் தொழிலாளர்கள் ரஷ்யாவில் வேலை நிறுத்தம்

மொஸ்கோ, ஜூன் 3

ரஷ்யாவில் சுரங்கத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

கடந்த ஒரு வருடகாலமாக இவர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

வேலை நிறுத்தக்காரர்கள் நேற்று முன் தினம் மொஸ்கோவில் ரயிலை நிறுத்தி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

(இ)

## பிரெஞ்சுப்பொதுத்தேர்தலில் ஆளும்கட்சி தோல்வியுற்றது

### இடதுசாரிகள் மீண்டும் ஆட்சிக்கு

பாரிஸ், ஜூன் 3

பிரான்ஸில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் பிரதமர் அலென் யூப்பே தலைமையிலான வலது சாரிக் கூட்டணி தோல்வி அடைந்துள்ளது.

இரண்டாவது கட்ட வாக்களிப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போது பிரதமர் அலென் யூப்பே தமது தோல்வியை ஒப்புக்கொண்டுள்ளார்.

மொத்தம் 577 ஆசனங்களைக்கொண்ட பிரெஞ்சு நாடாளுமன்றத்தில் சோஷலிஸ்ட் - கம்யூனிஸ்ட் கூட்டணி கூடுதல் ஆசனங்களைப் பெற்றுள்ளது. இதுவரை கிடைத்த தேர்தல் முடிவுகளில் கம்யூனிஸ்ட்கட்சி தனித்து 32 ஆசனங்களைக் கைப்பற்றி உள்ளது.

தேர்தல் தோல்வி காரணமாக வலது சாரிக் கூட்டணிக்குள் பிளவு கூடுதலாகி இருப்பதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி ஷிராக் பதவி விலக வேண்டும் என்று வலது சாரிக் கூட்டணிக்குள் ஒரு சாரார் குரல் எழுப்பி வருகின்றனர்.

பிரான்ஸில்தேர்தல் நடக்க 10 மாதங்கள் இருக்கும் போது வெற்றிவாய்ப்பைக் கருத்திற் கொண்டு நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்கான திகதியை பிரதமர் அலென் யூப்பே அறிவித்திருந்தார்.

எனினும்அவர்வெற்றிபெற முடியாதது குறித்து அரசியல் வட்டாரங்களில் ஆச்சரியம் தெரிவிக்கப்படுகிறது. (இ- 5)

## நேபாள உள்ளூராட்சித் தேர்தலில் கம்யூனிஸ்ட்டுகள் வெற்றி

நேபாளத்தில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களில் கம்யூனிஸ்ட்டுக்கள் 57 சதவீத ஆசனங்களை கைப்பற்றி உள்ளனர்.

இது தொடர்பான வெற்றி விழாவையொட்டி தலைநகர் காட்மண்டுவில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பேரணியில் 30 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். (இ)

## 47 ஆண்டுகள் வயிற்றில் கிடந்த அறுவைச் சிகிச்சைக் கருவி!

லண்டன், ஜூன் 3

47 ஆண்டுகளுக்கு முன்னர் வயிற்றுக்குள் தவறுதலாக விடப்பட்ட அறுவைச் சிகிச்சைக் கருவி ஒன்று கடந்த வாரம் மற்றொரு அறுவைச் சிகிச்சை மூலம் வெளியே எடுக்கப்பட்டது.

கொலம்பியாவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

## உலக அரங்கில்

### இஸ்ரேல் பிரதமருடன் பேச்சு

ஜெருஸலேம், ஜூன்3

எகிப்திய அதிபர் ஹொஸ்னி முபாரக்கின் பிரதிநிதி ஒருவர் இஸ்ரேல் சென்று இஸ்ரேல் பிரதமர் நந்தனியாகுவுடன் இரண்டரை மணி நேரம் பேச்சு நடத்தி உள்ளார்.

பேச்சின் முன்னேற்றம் குறித்து எதுவும் அறிவிக்கப்படவில்லை.

யூதக் குடியேற்றங்கள் தொடர்பாக இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் இடையில் மீண்டும் கசப்புணர்வு ஏற்பட்டிருப்பது தெரிந்ததே. (இ)

## தேர்தல் நெருங்கும் நேரம் அல்ஜீரியாவில் குண்டு வெடிப்பு

### ஐவர் பலியாகினர்

அல்ஜியேர்ஸ், ஜூன் 3

அல்ஜீரியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரு குண்டு வெடிப்புச் சம்பவங்களில் ஐவர் கொல்லப்பட்டனர்.

நாளை மறுதினம் வியாழக்கிழமை அல்ஜீரியாவில் பல கட்சிகள் கலந்து கொள்ளும் தேர்தல் நடைபெறுகிறது.

இத் தேர்தலுக்கு இஸ்லாமிய தீவிரவாதிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

1992ஆம் ஆண்டு அல்ஜீரியாவில் கடைசியாக தேர்தல் நடைபெற்றது.

அத் தேர்தலில் இஸ்லாமிய தீவிரவாதிகள் வெற்றி பெற இருந்த சமயம் இராணுவம் தலையிட்டு ஆட்சியைக் கைப்பற்றியது. (இ)

### கொலை!

யூதர்களுக்கு நிலம் விற்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மேற்குக் கரையில் மற்றும் ஒரு பலஸ்தீனர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

## ஜெயலலிதா - திருநாவுக்கரசு இன்று பொதுக்குழுவைக் கூட்டுகின்றனர்

### அ. தி. மு. கவுக்குள் பூசல் வலுக்கிறது

புதுடில்லி, ஜூன் 3

அ. தி. மு. கவின் இரு தரப்பினரும் அ. தி. மு. க. வின் பொதுக்குழுக் கூட்டத்தை இன்று சென்னையில் நடத்துவதாக அறிவித்துள்ளனர்.

பொதுக்குழுவை புதன் கிழமை கூட்டுவதாக முதலில் அறிவித்திருந்த செல்வி ஜெயலலிதா இப்போது பொதுக்குழு கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமையே நடைபெறும் என்று அறிவித்துள்ளார்.

கட்சியின் செயற்குழு இன்று ஒரு மணிநேரம் கூடும் என்றும் — அதன் பின்னர் பொதுக்குழுக் கூட்டம் தொடங்கும் என்றும் — தேவைப்பட்டால் பொதுக்குழுக் கூட்டம் நாளையும் தொடர்ந்து இடம்பெறும் என்றும் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

அ. தி. மு. கவிலிருந்து வெளியேற்றப்பட்ட எஸ். திருநாவுக்கரசுஇன்றுபொதுக்குழுக் கூட்டம் நடைபெறும் என்று ஏற்கனவே அறிவித்திருந்தார்.

அ. தி. மு. கவிலிருந்து திருநாவுக்கரசு வெளியேற்றப்பட்டதும் —

தம்மை வெளியேற்ற ஜெயலலிதாவுக்கு அதிகாரம் இல்லை என்று திருநாவுக்கரசு கூறியதும் தெரிந்தவையே.

இந்த நிலையிலேயே கட்சிக்கு உரிமை கோரி இருவரும் செயற்குழுக் கூட்டத்தைக் கூட்டுகின்றனர்.

அ. தி. மு. கவின் மாநிலங்கள் அவை உறுப்பினர்கள் 7 பேர் திருநாவுக்கரசுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சை: மற்றும் பாடசாலைகளின் பெறுபேறு

யாழ்ப்பாணம், ஜூன் 3

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜி. சீ. ஈ (சாதாரண தரப்) பரீட்சையின் பெறுபேறுகள் கடந்த வாரம் யாழ். நகரில் வெளியானது தெரிந்ததே.

முற்கொண்டு கிடைத்த பாடசாலைகளின் பெறுபேறுகள் ஏற்கனவே உதயனில் வெளியாகியிருந்தன.

இதுவரை எமக்குக் கிடைத்த மற்றும் பாடசாலைகளின் பெறுபேறுகள் வருமாறு:-

**யாழ். மத்திய கல்லூரி**
- ★ 6 டி — ஒருவர்

**யாழ். இந்து மகளிர்**
- ★ 8 டி — ஒருவர் (பிரதீபனா சிவநாதன்)
- ★ 6 டி — ஒருவர்
- ★ 5 டி — ஒருவர்
- ★ 4 டி — ஒருவர்

**கொக்குவில் இந்து**
- ★ 7 டி — இருவர்
- ★ 6 டி — 3 பேர்
- ★ 5 டி — 4 பேர்
- ★ 4 டி — 5 பேர்

**திருக்குடும்பக் கன்னியர்மடம் (ஆங்கிலம்)**
- ★ 5 டி — ஒருவர்
- ★ 4 டி — இருவர்

**வைத்தீஸ்வரா**
- ★ 6 டி — ஒருவர்
- ★ 2 டி — இருவர்

**புனித சாள்ஸ்**
- ★ 4 டி — இருவர்

**பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள்**
- ★ 7 டி — இருவர்
- ★ 6 டி 4 பேர்
- ★ 5 டி — 4 பேர்
- ★ 4 டி — 4 பேர்

**ஹாட்லி**
- ★ 7 டி — ஒருவர்
- ★ 6 டி — இருவர்
- ★ 5 டி — 8 பேர்
- ★ 4 டி — 11 பேர்

**வட இந்து மகளிர்**
- ★ 6 டி — ஒருவர்
- ★ 5 டி — இருவர்
- ★ 4 டி — ஒருவர்

**வேலாயுத ம. வி.**
- ★ 3 டி — ஒருவர்

**வடமராட்சி மத்திய மகளிர்**
- ★ 6 டி — இருவர்
- ★ 5 டி — ஒருவர்
- ★ 4 டி — 4 பேர்

**நெல்லியடி மத்திய ம. வி.**
- ★ 6 டி — இருவர்
- ★ 5 டி — ஒருவர்
- ★ 4 டி — ஒருவர்

**அல்வாய் சின்னத்தம்பி வி.**
- ★ 2 டி — ஒருவர்

**விக்கினேஸ்வரா**
- ★ 6 டி — ஒருவர்
- ★ 5 டி — ஒருவர்

**தேவரையாளி இந்து**
- ★ 4 டி — ஒருவர்

**ஞானசாரியார் கல்லூரி**
- ★ 4 டி — இருவர்

**இமையாணன் அ.த.க.பா.**
- ★ 3 டி — ஒருவர்

**உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி**
- ★ 5 டி — இருவர்

**மருதங்கேணி இ.த.க.பா.**
- ★ 2 டி — இருவர்

**செம்பியன்பற்று அ.த.க.பா.**
- ★ 3 டி — ஒருவர்

**நாகர்கோயில் ம. வி.**
- ★ 3 டி — இருவர்

**சாவகச்சேரி டிறிபேர்க்**
- ★ 7 டி — ஒருவர்
- ★ 6 டி — ஒருவர்
- ★ 5 டி — ஒருவர்
- ★ 4 டி — 3 பேர்

**சாவகச்சேரி மகளிர்**
- ★ 3 டி — ஒருவர்

**மீசாலை விக்னேஸ்வரா**
- ★ 2 டி — 3 பேர்

**சாவகச்சேரி இந்து**
- ★ 7 டி — ஒருவர்
- ★ 6 டி — இருவர்
- ★ 5 டி — 5 பேர்
- ★ 4 டி — 8 பேர்

**மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்**
- ★ 5 டி — ஒருவர்
- ★ 3 டி — ஒருவர்

**சந்திரபுர ஸ்கந்தவரோதயா**
- ★ 3 டி — ஒருவர்

**இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்**
- ★ 2 டி — ஒருவர்

**கச்சாய் அரசினர் வித்தி.**
- ★ 4 டி — ஒருவர்
- ★ 2 டி — ஒருவர்

**கைதடி விக்னேஸ்வரா**
- ★ 4 டி — ஒருவர்
- ★ 3 டி — 3 பேர்

**மானிப்பாய் இந்து**
- ★ 4 டி — ஒருவர்

**மல்லாகம் மகாவித்தி.**
- ★ 6 டி — ஒருவர்
- ★ 5 டி — ஒருவர்
- ★ 4 டி — ஒருவர்

**ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தி.**
- ★ 5 டி — ஒருவர்

**உடுவில் மகளிர்**
- ★ 7 டி — இருவர்
- ★ 6 டி — இருவர்
- ★ 5 டி — 4 பேர்
- ★ 4 டி — 5 பேர்

**ஸ்கந்தவரோதயா**
- ★ 5 டி — ஒருவர்
- ★ 4 டி — 3 பேர்

**அளவெட்டி அருணோதயா**
- ★ 6 டி — இருவர்
- ★ 5 டி — இருவர்

**சுளமங்கால் றோ. க. பா.**
- ★ 3 டி — ஒருவர்

**மானிப்பாய் மகளிர்**
- ★ 6 டி — ஒருவர்

**மானிப்பாய் இந்து**
- ★ 4 டி — ஒருவர்

**மானிப்பாய் மெமோறியல்**
- ★ 3 டி — ஒருவர்

**கந்தரோடை தமிழ்க் கந்தையா**
- ★ 3 டி — ஒருவர்

**இராமநாதன் கல்லூரி**
- ★ 4 டி — இருவர்

**மகாஜனா**
- ★ 7 டி — இருவர்
- ★ 6 டி — இருவர்
- ★ 5 டி — 4 பேர்
- ★ 4 டி — 4 பேர்

**யூனியன கல்லூரி**
- ★ 7 டி — ஒருவர்
- ★ 6 டி — இருவர்
- ★ 5 டி — 3 பேர்
- ★ 4 டி — 3 பேர்

**இளவாலை மெய்கண்டான் வித்தி.**
- ★ 5 டி — ஒருவர்

**பண்ணாகம் மெய்கண்டான்**
- ★ 4 டி — ஒருவர்

**மூளாய் சிவப்பிரகாசம்**
- ★ 3 டி — ஒருவர்

**அராலி இந்து**
- ★ 2 டி — ஒருவர்

**அராலி சரஸ்வதி**
- ★ 4 டி — ஒருவர்

**திருஞானசம்பந்தர் வித்தியாலயம்**
- ★ 2 டி — ஒருவர்

**சங்கானை சிவப்பிரகாசம்**
- ★ 4 டி — ஒருவர்
- ★ 3 டி — இருவர்
- ★ 2 டி — ஒருவர்

**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி**
- ★ 7டி — 3 பேர்
- ★ 6டி — ஒருவர்
- ★ 5டி — 4 பேர்
- ★ 4டி — ஒருவர்

**விக்ரோறியாக் கல்லூரி**
- ★ 7டி — ஒருவர்
- ★ 3டி — 3 பேர்

**வட்டு. இந்துக்கல்லூரி**
- ★ 7டி — ஒருவர்
- ★ 4டி — இருவர்
- ★ 2டி ஒருவர்

(இ-15-31-117-152-173)

## வெங்காயச் செய்கையாளர்கள் வடமராட்சியில் ஆர்வம் குறைவு

யாழ்ப்பாணம், ஜூன் 3

வடமராட்சிப் பகுதி விவசாயிகள் தற்போது வெங்காயச் செய்கையில் அக்கறை காட்டுவதில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

வழமையில் மே, ஜூன் மாதங்களில் வெங்காயச் செய்கையை மேற்கொள்ள விவசாயிகள் தொடங்கி விடுவர்.

ஆனால், தற்போது விவசாயிகள் வெங்காயச் செய்கையில் நாட்டமின்றி உள்ளனர் என்று புலோலி, அம்பன், புத்தூர் பகுதிகளுக்கான கமநல சேவைகள் கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் எஸ். உருத்திரேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் செய்கை பண்ணப்பட்ட வெங்காயத்தை சந்தைப் படுத்துவதில் விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் காரணமாகவே தற்போது புதிதாக வெங்காயச் செய்கையில் ஈடுபடப் பின் நிற்பதாகக் கூறப்படுகின்றது. (ஐ - 5)

## டாக்டர் பற்றாக்குறை விரைவில் நீங்கும்

### அமைச்சு விவரம் திரட்டுகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ். மாவட்டத்தில் நிலவும் டாக்டர்கள் பற்றாக்குறை நீங்கும்.

இது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக சுகாதார அமைச்சு விவரங்களைக் கோரியுள்ளது.

இலங்கையில் பணியாற்ற அழைக்கப்படவுள்ள கியூபா நாட்டு டாக்டர்களைக் கொண்டு குடாநாட்டில் உள்ள வெற்றிடங்களை நிரப்ப சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

குடாநாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் நிலவும் பற்றாக்குறை விவரங்களை உடன் அனுப்புமாறு சுகாதார அமைச்சு யாழ். சுகாதாரப் பணிப்பாளர் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் ஆகியோரிடம் கேட்டுள்ளது. (இ-3)

## ஸ்கந்தபுரத்தில் ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஜூன் 3

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கையைக் கண்டித்தும், திட்டமிட்டு மேற்கொண்டு வரும் உணவு, மருந்துத் தடையைக் கண்டித்தும் கடந்த வியாழக்கிழமை வன்னி, ஸ்கந்தபுரத்தில் பல்லாயிரக் கணக்கானோர் கண்டனப் பேரணி ஒன்றை நடத்தினர்.

மேற்படி தடைகளை நீக்கக் கோரி ஜனாதிபதி சந்திரிகாவுக்கு மக்களின் கையொப்பம் அடங்கிய மனு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள் ஐக்கிய நாடுகள் சபைக்கும், சர்வதேச தொண்டர் நிறுவனங்களுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ-5)

## முன்பள்ளி ஆசிரியர் கருத்தரங்கு

திருநெல்வேலி, ஜூன் 3

வலி. தென் மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவிலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சுகாதார கருத்தரங்கு சமீபத்தில் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்றது.

யாழ். சுகாதார கல்வி உத்தியோகத்தர் எஸ் இராஜேந்திரம், மானிப்பாய் சுகாதார பரிசோதகர் எஸ். ரவீந்திரன், குடும்பநல சேவை உத்தியோகத்தர் செல்வி கே. டானியல் ஆகியோர் இதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்கள். (இ-135)

## என்ன செய்யப் போகிறார்கள்?

'வெலிஓயா' என்று பெயர் மாற்றப்பட்ட மணலாறு பிரதேசம் அநுராதபுரத்துடன் சேர்க்கப்பட்டு விட்டது என்ற அறிவிப்பு ஒரு தமிழனால் நினைத்துக் கூடப்பார்க்க முடியாத ஒன்றாகும்.

பறையனாலங்குளத்தை (பறையன் ஆலங்குளத்தை) ''சப்பு மல்புர'' என்று மாற்றியதை உடன் வாபஸ் பெறாவிட்டால் அரசுக்குத் தாங்கள் அளித்து வரும் ஆதரவை நிறுத்திவிடுவோம் என்று த. சித்தார்த்தன் எம். பி ஓர் அறிக்கை விட்டிருந்தார். இவரும் சரி, தமிழர் விடுதலைக்கூட்டணி உட்பட ஏனைய தமிழ்க்கட்சிகளும் சரி என்ன செய்யப் போகிறார்கள்? தனிச்சிங்களச் சட்டம் கொண்டு வந்த நாள்களில் தமிழரசுக் கட்சி திருமலையில் ஓர் எதிர்ப்புக் கூட்டத்தை ஒழுங்கு செய்து யாழ்ப்பணத்தில் இருந்தும், மட்டக்களப்பில் இருந்தும் திருமலைக்கு தமிழ்மக்கள் கால்நடையாகச் செல்ல ஏற்பாடாகியது. தமிழ் மாகாணங்கள் ஊடாகவே திருமலை செல்லவேண்டும் என்று வீதி இல்லாத (அப்பவும் சரி இப்பவும் சரி) மணலாறு ஊடாகவே தமிழ்மக்கள் பாதயாத்திரை சென்றனர். இதற்கு அமிர்தலிங்கம் தலைமை வகித்துச்சென்றார்.

அரசபடைகளால் அழைத்துச் செல்லப்பட்ட தங்கள் பிள்ளைகள் எங்கு இருக்கிறார்கள் என்பதை ஐநூற்றுக்கும் மேற்பட்ட தமிழ்த்தாய்மார் இர டுபிள்ளைகளின் தாயாகிய அரசுத்தலைவிக்கு விண்ணப்பிக்கும் இந்நேரத்தில், இந்த நாட்டில் தமிழருக்கே இனிஇடமில்லை; எல்லோரும் பௌத்த சிங்களராக மாறவேண்டியது தான் என்பதை ஏற்படுத்தும் நடவடிக்கையே மணலாறு அநுராதபுரத்துடன் இணைக்கப்பட்ட செயல். இந்த நாட்டில் தமிழரைத் தமிழராக இனியும் வாழச்செய்ய கடவுளாலும் முடியாது.

உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். — செ. அழகரத்தினம்.

## உணவுச் சாலைகளில் சுகாதாரம்

அண்மைக்காலமாக யாழ். மாவட்டத்தில் சுகாதாரத்துக்கு அச்சுறுத்தலாக நடைபெறும் விடயங்களில் ஒரு சிலவற்றை மட்டும் காலத்துக்கு காலம் யாழ். மாவட்ட உணவு, மருந்துப் பரிசோதகர் ரி. மகாதேவன் தமது பணியின் மூலம் வெளிக்கொணர்ந்து நடவடிக்கை எடுத்துவருகின்றார். அவரது பணி பாராட்டத்தக்கது. யாழ். மாவட்டத்தில் மற்றைய அதிகாரிகள் இதுமட்டத்தில் எந்த நடவடிக்கையும் எடுப்பதாக இதுவரை பத்திரிகையில் செய்தி வெளிவரவில்லை. அவர்கள இவ்விடயத்தை கண்டும் காணாமல் இருப்பதுபோல் தெரிகின்றது.

அண்மையில் சுகாதார சேவைகள் திணைக்கள உயர் அதிகாரியொருவருக்கு காலாவதியான இனிப்புப் பண்டத்தையே யாழ்ப்பாண நகர வர்த்தகர் ஒருவர் விற்பனை செய்து வந்ததையும் பத்திரிகையில் படித்தபின்னர், சுகாதாரப்பகுதி அதிகாரிகளின் பணி குறித்துச் சிந்திக்க வைத்துள்ளது.

தொற்று நோய்க்கிருமிகள் அதிகம் பரவுவது உணவுச் சாலைகளில் தான். குறிப்பாக யாழ். மாநகரசபை எல்லைப் பகுதிகளில் இயங்கும் உணவு விடுதிகளின் சுகாதார மேம்பாடுபற்றி அதிகம் சொல்லவேண்டியதில்லை. பெரும்பாலான தேநீர்ச் சாலைகளில் கழிவுநீர், சாதாரண வாளிகளில் சேகரிக்கப்பட்டு அகற்றப்படுவதுடன், அதே அறையில் இலையான்கள் மொய்த்திருப்பதை எவரும் காணலாம். தேநீர்பட்டறைகளின் சுத்தம் பற்றி கூறமுடியாவிட்டாலும் அவர்கள் அணிந்திருக்கும் ஆடைகளை தொற்றுநீக்கி கொண்டுதான் கிருமிகளை அகற்றமுடியும் என்ற நிலையே காணப்படுகிறது.

**பொதுசன திருமுகம்**

பரிமாறப்படும் உணவு நேரத்துக்கு நேரம் இலையான்கள் மொய்த்த பின்னர் மீண்டும் வைக்கப்பட்டிருக்கும் இடத்தைச் சென்றுவிடுகின்றன. உணவு உண்பதற்கு முன்னர் கைகளைச் சவர்க்காரம் போட்டு கழுவியபின்னர் உண்ண வேண்டுமென சிறுவயது முதல் கல்லூரிகளில் போதிக்கப்படுகின்றது. ஆனால் சுகாதார அதிகாரிகளின் மேற்பார்வையில், ஒரே அறையில் கைகழுவிய தண்ணீர் அழுக்குவாளிகளும், எச்சிலைத் துப்பி கழுவும் தொட்டிகள் மறுபுறத்திலும் இருப்பதைக் காணலாம்.

இவற்றை எல்லாம்விட சாப்பாட்டு மேசைகளை துடைக்கும் துண்டு அங்கு ஒரு கிருமி உற்பத்தி துண்டாகவே காட்சி தருகின்றன.

ஓர் உணவு விடுதியை நடத்துவதற்கு பல சட்டவிதி முறைகள் உண்டு. ஒருகாலத்தில் யாழ்ப்பாணத்தில் சுகாதார வசதிகள் சிறப்பாக இருந்தமை உண்மை. இன்றைய நிலையோ முழத்துக்கு முழம் உள்ள உணவு விடுதிகளில் சுகாதார வசதிகளை கண்காணிக்கவோ, சட்டநடவடிக்கை எடுக்கவோ அதிகாரிகள் தயக்கம் காட்டுவதால் காலப்போக்கில் பொதுச் சுகாதாரத்துக்கு பங்கம் ஏற்படவழி அமைத்துவருகின்றது. வாந்திபேதி, வயிற்றுளைவு, நெருப்புக்காய்ச்சல் போன்ற நோய்கள் சமூகத்தைப் பெரும் எண்ணிக்கையில் கொன்றொழிக்கும் காலம் வருமுன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுப்பார்களா?

யாழ்ப்பாணம். — ஐயா சச்சிதானந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

# அழிந்து போயுள்ள குடாநாட்டை மீண்டும் கட்டி எழுப்ப வேண்டும்

## அதுவே தம்பணி என்கிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம், ஜூன் 3

''அழிந்து போயுள்ள எமதுகுடாநாட்டை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வர வேண்டும். இந்த இலக்குடனேயே நான் செயலாற்றிக் கொண்டிருக்கிறேன். இந்நிலையில் இங்கிருந்து இடம்பெயர்ந்து கொழும்பு சென்றுள்ளவர்கள் அங்கிருந்து எமக்கு ஆலோசனை கூறத் தேவையில்லை. உண்மையில் அவர்களுக்கு தம்மண்ணில் அக்கறையிருந்தால் இங்கு வந்து எம்முடன் இணைந்து செயற்படட்டும்''

யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் அரியாலை மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பாராட்டு விழாவில் பதில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

கடந்த ஞாயிறு நடந்த இந்த வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: ''இன்று இங்கு ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் என்னைப் பற்றிப் பல கோணங்களிலும் பலர் உரையாற்றினார்கள்.

குடா நாட்டு மக்கள் அடைந்த நன்மைகளுக்கு எனது செயற்பாடுகள்தான் காரணம் என்றும் கூறினார்கள்.

எனது பணிகள் தடங்கல் இன்றித் தொடர எனக்கு உதவியது அரச சேவைமட்டுமல்ல. கடந்த 30, 40 ஆண்டுகளாக எனது கிராமத்தில் செய்த சமூகப்பணியின் வெளிப்பாடான தொண்டு மனப்பான்மையும் தான்.

### மன உறுதி விடா முயற்சி

இக்கட்டான காலகட்டத்தில் மனஉறுதி, விடாமுயற்சி எனக்கு உறுதுணையாக இருந்தன.

உலகமே கண்டிராத பெரிய இடம்பெயர்வு ஒன்றின் மூலம், மக்கள் ஒரே இரவில் இருக்க இடம் இன்றி, உண்ண உணவின்றி கால்போன போக்கில் போய்க்கொண்டிருந்தார்கள்.

இந்த நேரத்தில் குடா நாட்டில் அரச அதிபரும் இல்லை. ''மக்கள் போகிறார்கள் அவர்களுக்கு என்ன செய்யவேண்டும்'' என்று தெரியாத நிலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து உணவுப் பொருள்களை எல்லாம் தென்மராட்சி நோக்கி நகர்த்தினோம்.

அந்த சமயத்தில் நான் தனியாளாக நின்று செய்யவில்லை. செயலக புனர்வாழ்வு பிரிவு நிர்வாக அதிகாரி வ. விக்கினேஸ்வரமூர்த்தியும், களஞ்சியப் பொறுப்பாளர் இ. கதிர்காமநாதனும் என்னுடன் உறுதுணையாக இறுதி வரை நின்றனர்.

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதியில் இடம்பெயர்ந்து வாழ்ந்த மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்கியதன் மூலம் ஆத்ம திருப்தி பெற்றோம்.

### அங்குலம் அங்குலமாக பணிகள் தொடரும்

மீண்டும் குடா நாடு திரும்பி ஒவ்வொரு அங்குலம் அங்குலமாக எமது பணிகளை மேற்கொண்டு வருகிறோம்.

மாறிவரும் நவீன உலகுக்கு ஏற்ப நாமும் மாற வேண்டும். அபிவிருத்தியில் காலடி வைக்க வேண்டும். பழைய நிலைக்கு யாழ்ப்பாணத்தைக் கொண்டு வர வேண்டும் என்ற இலக்குடன் செயற்படுகின்றோம்.

### கொழும்பில் இருந்து ஆலோசனை வேண்டாம்

இன்று இங்கு வைத்திய நிபுணர்கள் இல்லை; சிறந்த நிர்வாகிகள் இல்லை, சிறந்த ஆசிரியர்கள் இல்லை. இந்நிலையில் இங்கிருந்து சென்ற பல்துறை சார்ந்த நிபுணத்துவம் பெற்றவர்கள் கொழும்பில் இருந்து கொண்டு எமக்கு ஆலோசனை கூறுகிறார்கள்.

நான் கொழும்பு செல்கின்ற போது நான் யாழ்ப்பாணம் திரும்ப முடியாத அளவுக்கு அங்கு ஆலோசனை கூற கூட்டங்களை நடத்துவார்கள்.

''யாழ்ப்பாணம் போகத் தேவையில்லை. இங்குள்ளவர்களுக்குப் பணி செய்யுங்கள்'' என்று கூறும் வகையில் அவர்களின் செயற்பாடுகள் இருக்கும்.

இங்கு வந்து எம்முடன் இணைந்து செயற்படுமாறு அவர்களைக் கேட்கிறேன். எமக்கு அவர்களிடம் இருந்து ஆலோசனை தேவையில்லை. இந்த மண்ணில் இருக்கும் மக்களிடம் இருந்தே ஆலோசனை தேவை.

இன்று அரச மட்டத்தில் இளம் சமூக சிந்தனையுடன் அதிகாரிகள் உள்ளனர். அவர்களுடன் எமது இளம் சிந்தனையாளர்கள் தமது ஆலோசனைகளைத் தெரிவித்து மீண்டும் எமது பகுதியைக் கட்டியெழுப்ப சகலரையும் அழைக்கிறேன் —

இப்படி அரச அதிபர் கூறினார். (இ-3)

# லயன்ஸ் கழகம் கண்ணாடி வழங்கியது

சாவகச்சேரி, ஜூன் 3

தென்மராட்சிப் பகுதியில் பார்வை குறைபாடுடைய சுமார் 35 பேருக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகம் மூக்குக் கண்ணாடி வழங்கியது.

சாவகச்சேரி லயன்ஸ் கழக அலுவலகத்தில் இது தொடர்பான வைபவம் இடம்பெற்றது.

சாவகச்சேரி லயன்ஸ்கழகத் தலைவர் சி. கமலநாதன் தலைமையில் நடந்த இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக எஸ். ஏ. ஈ. ஜெகநாதன் கலந்து கொண்டு பார்வை குறைந்தவர்களுக்கு கண்ணாடிகளை வழங்கினார். (இ-31)

# கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் ஹற்றன் நஷனல் வங்கியின் அனுசரணையுடன் நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை 17 வயதுக்குட்பட்டோர் 'எ' பிரிவில் யாழ். மத்திய கல்லூரியை எதிர்த்து பரி.யோவான் கல்லூரி ஆடும். ஆட்டம் மத்திய கல்லூரி மைதானத்திலும் —

கொக்குவில் இந்துக் கல்லூரியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆடும் ஆட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரிமைதானத்திலும்

புனித பத்திரிசியார் கல்லூரியை எதிர்த்து யூனியன் கல்லூரி ஆடும் ஆட்டம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் —நடைபெறும். (இ-4)

# யாழ்ப்பாணத்துக்கு நியமிக்கப்பட்ட புற்று நோய் நிபுணர் மகரகமவில்!

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ். மாவட்டத்துக்கு 1995 ஆம் ஆண்டு புற்று நோய் சிகிச்சை நிபுணராகப் பணியாற்ற நியமிக்கப்பட்டவர் தற்போது கொழும்பு மகரகம ஆஸ்பத்திரியில் பணியாற்றுவது தெரியவந்துள்ளது.

யாழ். மாவட்டத்துக்கு புற்றுநோய் சிகிச்சை நிபுணர் ஒருவரை நியமிக்குமாறு யாழ். புற்றுநோய்த் தடுப்புச் சங்கம் சுகாதார அமைச்சருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியிருந்தது.

இதனை அடுத்து யாழ். மாவட்டத்துக்கு புற்று நோய் சிகிச்சை நிபுணராக டாக்டர் வி. விக்கினேஸ்வரன் 95 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21 ஆம் திகதி முதல், நியமிக்கப்பட்டுள்ளார் என்று சுகாதார அமைச்சர் பௌசி யாழ். புற்று நோய்த் தடுப்புச்சங்கத்துக்கு அறிவித்திருந்தார்.

எனினும் இந்த வைத்திய நிபுணர் யாழ்ப்பாணம் வராமல் மகரகமவில் உள்ள புற்றுநோய் ஆஸ்பத்திரியில் பணியாற்றுவது தற்சமயம் தெரியவந்துள்ளதாகவும் —

இவரை யாழ்ப்பாணம் அனுப்ப ஏற்பாடு செய்யுமாறும் — யாழ். புற்றுநோய் தடுப்புச்சங்கம் அமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளது.

(இ-3)

# படையினரின் அடுத்த நகர்வு எந்நேரமும் ஆரம்பிக்கலாம்!

## ரம்பைக்குளத்தில் நடமாட்டம் அதிகரிப்பு

கொழும்பு ஜூன் 3

கடந்த ஒன்பது நாள்களாக ஓமந்தையில் ரம்பைக்குளத்திலும் -

நெடுங்கேணியிலும் - நிலைகொண்டுள்ள வெற்றிஉறுதி ராணுவ நடவடிக்கைப் படையினர் தமது அடுத்த நகர்வுக்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று ராணுவ ஆய்வாளர்களை ஆதாரங் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான படையினர் புதிதாக யுத்த முனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் -

அடுத்த கட்ட நகர்வு அனேகமாக இரு முனைநகர்வாக இருக்கலாம் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓமந்தையில் இருந்து ரம்பைக்குளத்துக்கு நகர்ந்த படையினர் புளியங்குளம் மாங்குளம் நோக்கி தொடர்ந்து ஷெல் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

அதே சமயம் ரம்பைக்குளத்தில் படையினர் தொடர்ந்து காவலரண்களை அமைத்து வருகின்றனர்.

ஓமந்தை ரம்பைக்குளம் பகுதிகளில் வாகனங்களின் நடமாட்டங்கள் அதிகரித்து வருவதாகவும் -

படையினர் குவிக்கப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (இ – 5)

# பாசையூர் அ. அட்டை

யாழ்ப்பாணம், ஜூன் 3

பாசையூர் மேற்கு ஜே-65 கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்தவர்களது ஒரு தொகுதி விசேட அடையாள அட்டைகள் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் வைத்து விநியோகிக்கப்படும் என்று சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (இ-4)

# கொடிவாரம்

சாவகச்சேரி, ஜூன் 3

சாவகச்சேரி லயன்ஸ்கழகத்தின் கொடிவாரம் இம்மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது. (இ-31)

# மின்சாரத்தை துஷ்பிரயோகம் செய்யவேண்டாம் என அறிவுறுத்து

திருநெல்வேலி ஜூன் 3

ஜெனரேட்டர் மூலம் வழங்கப்பட்டு வரும் மின்சாரத்தை சிலர் தவறான முறையில் பயன்படுத்தி வருவது திடீர்ப் பரிசோதனை மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பொது மக்கள் தெரிவித்த இரகசியத் தகவல்களை அடுத்து யாழ். நகரில் திடீர்ப் பரிசோதனை மேற் கொள்ளப்பட்ட போது வீடுகளுக்கு விநியோகிக்கப்பட்ட மின்சாரத்தின் மூலம் வெல்டிங் (மின்ஒட்டு) வேலைசெய்தல் போன்ற நடவடிக்கை செய்யப்படுவதாக கண்டு பிடிக்கப்பட்டதாக இலங்கை மின்சார சபை வட பிராந்திய பொது முகாமையாளர் வே. இராஜேந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை சில இடங்களில் மின்சாரத்தை திருடி சிலர்பாவிப்பதாக கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து மேற் கொள்ளப்பட்ட திடீர்ப் பரிசோதனையின் போது சிலர் அகப்பட்டு கொண்டதாகவும் —

மின் விநியோகத்தை சீர்குலைக்கும் இத்தகைய தவறான செயல்களில் ஈடுபட வேண்டாம் என்று மின்சார சபை அதிகாரிகளால் எச்சரிக்கை செய்யப்பட்டதாகவும் பிரதி பொது முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

ஆறு வருட கால இடைவெளிக்கு பின்பு கிடைத்த மின் விநியோகத்தை சீரான முறையில் நடத்துவதற்கும் —

இதுவரை மின் விநியோகம் கிடைக்காதவர்களுக்கு மின்சாரத்தை வழங்குவதற்கும் அனைவரும் இலங்கை மின்சார சபைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

(இ-35)

# நெடுந்தீவு அ. அட்டை

நெடுந்தீவு, ஜூன் 3

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான விசேட அடையாள அட்டைகள் விரைவில் வழங்கப்படும் என யாழ். செயலகத்தில் உள்ள அடையாள அட்டைகள் வழங்கும் பிரிவுவில் தெரிவிக்கப்பட்டது. (இ-111)

# கூட்டுறவு ஆஸ்பத்திரிக் கட்டடத்தில் தெல்லிப்பழை ஆஸ்பத்திரி இயங்கும்

## அரச அதிபர் நேரில் சென்று பார்த்தார்

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையை தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைக் கட்டடத்தில் இயங்க வைக்க யாழ் அரச அதிபர் செ. பத்மநாதன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

1990 ஆம் ஆண்டு வலி-வடக்கு இடம் பெயர்வுடன் செயல் இழந்து கிடக்கும் தெல்லிபபழை அரசினர் வைத்தியசாலையை மீண்டும் பழைய இடத்தில் இயக்க அரச அதிபர் முயற்சி எடுத்திருந்தார்.

எனினும் பாதுகாப்புக் காரணங்களுக்காக தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை பழைய இடத்தில் இயக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

வலி - வடக்குப் பகுதியில் மீளக்குடியமரவிருக்கும் மக்களுக்கு வைத்திய வசதி வழங்கும் வகையில் தெல்லிப்பழையில் — துர்க்கை அம்மன் கோயிலுக்கு முன்பாக — உள்ள கூட்டுறவு வைத்தியசாலையில் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள கட்டட வசதிகளையும், மேலும் அமைக்கப்பட வேண்டிய கட்டடத் தேவைகளையும் அரச அதிபர் தலைமையிலான குழு ஒன்று கடந்த சனிக்கிழமை அங்கு சென்று நேரில் ஆராய்ந்தது.

கட்டட நிபுணர்களும், சுகாதாரத்துறை அதிகாரிகளும் அரச அதிபருடன் சென்றிருந்தனர்.

தற்சமயம் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை மானிப்பாயில் இயங்குவது குறிப்பிடத்தக்கது. (இ-3-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

அ. கோபிதன் ஆகிய எனது இள மஞ்சள் நிறமான கைப்பையொன்று யாழ். பிறவுண் வீதிக்கும், திருநெல்வேலி சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மனிதாபிமான அடிப்படையில் திருநெல்வேலி 'ஏசியன் புடவைக்' கடையில் ஒப்படைக்கவும். (47578)

### "சூழல்"

''மரம் நடுவீர் பயன் பெறுவீர்'' சக்கரை வேம்பு, பலா, இலுப்பை, கரிசலாங்கண்ணி மூலிகைக்கன்றுகள் ரூபா 10/- அல்லது மில்க்வைற் சோப்/சலவைப் பவுடர் வெற்று உறைகள் பத்து கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம் மில்க்வைற். (சி/ 852)

### புத்தகப் பிரியர்களே!

புதிய தமிழ் வெளியீடுகள் ஏராளம்; வாருங்கள்; பாருங்கள்! எடுத்து வாசியுங்கள், அறிவைப் பெருக்குங்கள். லிங் லெண்டிங் லைப்ரறி Ling Lending Library 41, தபாலக வீதி, சாவகச்சேரி. (47099)

## வடமராட்சியில் தரம்குறைந்த கோதுமை மா

யாழ்ப்பாணம், ஜூன் 3

வடமராட்சிப் பகுதியில் உள்ள பேக்கரிகளுக்கு கொடுக்கும் கோதுமை மா பழுதடைந்து தரமற்றதாகக் இருப்பதாக சில பேரிகளில் இருந்து தெரியவருகிறது.

வண்டுகளும், புழுக்களும் மாவினுள் அதிகம் காணப்படுவதாகவும் —

கோதுமைமாப பழுதடைந்து பாணும தரமற்றதாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் பாணின் தரம், நிறை குறித்து பொது மக்களிடமிருந்து முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் ஏற்படுத்தப்பட்ட நுகர்வோர் பாதுகாப்புக் கழக உறுப்பினர் ப. தியாகராசா யாழ். விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கும் சங்கத் தலைவருக்கும் கடிதம் எழுதி உள்ளார். (இ-15-118)

## ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

திருநெல்வேலியில் புதிதாக மின்சாரம் வழங்குவதற்கான வேலைகள் பூர்த்தியடைந்து டிராக்ரரின் உதவியுடன் மின்சார இயந்திரத்தை உரிய இடத்தில் விடுவதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் டிராக்டர் விபத்துக்குள்ளாகி மின்சார இயந்திர திருத்துநர் ஒருவர் படுகாயமடைந்தார்.

இச் சம்பவத்தில் கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த செல்லர் சங்கரசிவம் (வயது 38) என்பவரே படுகாயமடைந்தவராவார். (இ-15)

## NIGHT VIDEO URUMPIRAI

பழைய தமிழ், ஆங்கில திரைப்பட வீடியோ நாடாக்களின் மூலப்பிரதி விற்பனைக்காக உண்டு என்பதை சகல வீடியோ ஸ்தாபனங்களுக்கும் அறியத் தருகின்றோம்.

- நிர்வாகி

(47587)

---

உ

ஓம் சரவணபவ

கைதடி கயற்றசிட்டி

அருள்மிகு

## கந்தசுவாமி தேவஸ்தானம்

## வருடாந்த மஹோற்சவம்

11-06-1997 புதன்கிழமை நண்பகல் 11-00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். 18ஆம் திகதி புதன்கிழமை மாலை 4-00 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8-30 மணிக்கு தேர்த்திருவிழாவும், 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

ஆலய திருவிழாக்கான தற்காலிக கடைகள் வழங்குதல் 06-06-97 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறும்.

- பரிபாலன சபையினர்

கைதடிவடக்கு,
கைதடி. (47586)

---

தொல்புரம் கிழக்கு

## விக்கினேஸ்வரா சனசமூக நிலையம்

சுழிபுரம்

சனசமூக நிலைய கட்டட திருத்த வேலைகளுக்காக 01/06/1997 (ஞாயிறு) நடத்தப்பட்ட

## அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவு

1 ஆம் பரிசு - சீட்டு இல. 387
2 ஆம் பரிசு - " " 927
3 ஆம் பரிசு - " " 513

ஆறுதல் பரிசு பெறும் சீட்டு இலக்கங்கள்:
1832, 1908, 549, 2342, 2332

மேற்படி பரிசுகளைப் பெறுவோர் தகுந்த ஆதாரங்களுடன் எதிர்வரும் 08/06/97 (ஞாயிறு) பி.ப. 3.30 மணியளவில் சனசமூக நிலையக் கட்டடத்தில் நேரில் சமுகம் தந்து நிர்வாகத்தினரிடமிருந்து பரிசுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

— நிர்வாகம்

(47579)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

## கமலரட்னாவதி சுந்தரலிங்கம்

தோற்றம்: 30–05–1943 மறைவு: 14–06–1996

திதி: 03 - 06 - 97

ஐயிரண்டு திங்களாய்
அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே
பரிந்தெடுத்துச் — செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக்
கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி?

குடும்பத்தினர்.

236, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (47590)

---

# முன்பள்ளி வள நிலையங்கள் கோட்டமட்டத்தில் அமைக்கப்படும்

## யுனெஸ்கோ உதவி வழங்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ். மாவட்டத்தில் முன்பள்ளிக்கல்வியை அபிவிருத்தி செய்யும்நோக்கத்துடன் முன்பள்ளி வள நிலையங்கள் கோட்ட மட்டத்தில் அமைக்கப்பட விருக்கின்றன.

மாணவர்களிடையே ஆரம்பக் கல்வியின் தரம் வீழ்ச்சி கண்டு வருவதையடுத்து, முன்பள்ளிக்கல்வியை விருத்தி செய்யும் நோக்கத்துடன் யுனெஸ்கோவின் உதவியுடன் இந்த வள நிலையங்கள் அமைக்கப்படும்.

ஒவ்வொரு கோட்டத்தில் உள்ள முன்பள்ளிக்கல்வி நிலையங்கள் குறித்த விவரங்களைத் திரட்டி அவற்றுக்குத் தேவையான வளங்களை வழங்கல், ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கல் போன்ற செயற்பாடுகளை இந்த வள நிலையங்கள்மேற்கொள்ளும். (இ-3)

---

யாழ்ப்பாணம்

மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ. து)

அனைத்துலக

## கூட்டுறவு தினவிழா - 1997

## போட்டிகள்

மேற்படி விழாவையொட்டி பாடசாலை மாணவர்கள், அங்கத்தவர்கள், மகளிர் குழு, பணியாளர்கள் ஆகியோருக்கிடையே பின்வரும் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. போட்டிகள் யாவும் கோட்ட மட்டத்தில் நடத்தப்பட்டு வெற்றி பெறுவோருக்கிடையே மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும்.

1. பாடசாலை மாணவர்கள் - பேச்சு, கட்டுரை, சுவரொட்டி ஆகிய போட்டிகள் மேற்பிரிவு, மத்தியபிரிவு, ஆரம்ப பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப்படும். இப் போட்டிக்கான முடிவு திகதி 10 - 06 - 97 ஆகும்.
2. அங்கத்தவர் போட்டி - பேச்சுப் போட்டி முடிவு திகதி. 12 - 06 - 97
3. மகளிர் குழுப்போட்டி - குழுப்பாடல் போட்டி முடிவு திகதி, 12 - 06 - 97
4. பணியாளர் - வினாடிவினாப் போட்டி முடிவு திகதி 07 - 06 – 97

போட்டிகள் தொடர்பான ஏனைய விவரங்களை சகல பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

- மாவட்டச் செயலாளர்.

இல: 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (சி-855)

---

சுதுமலை வடக்கு, மானிப்பாய்

அருள்மிகு

## ஆனந்த வைரவர் கோயில் 1008, 108 சங்காபிஷேக விஞ்ஞாபனம்

நிகழும் ஸ்வஸ்தி ஸ்ரீ ஈசுர ஹு வைகாசி மீ 21 ஆம் நாள் (04 - 06 - 97) புதன்கிழமை 8.00 மணியளவில் சங்காபிஷேகம் இடம்பெற்று பி.ப. 3.00 மணியளவில் வசந்த மண்டப பூசை நடைபெற்று அதனைத் தொடர்ந்து 4.00 மணியளவில் சண்முக அர்ச்சனை நடைபெறும்,

அடியார்கள் அனைவரும் எம் பெருமானை தரிசித்து இஷ்ட சித்திகளை பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகிறோம்.

உபயகாரர்:

பிரம்மஸ்ரீ ந. ஜெகதீஸ்வரகுருக்கள் குடும்பம்

சுதுமலை மத்தி,
மானிப்பாய். (47585)

---

## தொடர்புகொள்ளவும்

தனிநாயக அடிகளார் சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கம்

மேற்படி சங்கத்தின் அங்கத்தவர்கள் அனைவரையும் எதிர்வரும் 15-06-97 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு

இல. 61, மருதடி வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரியில் நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

வே. சுந்தரலிங்கம்
தலைவர்.

(47576)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் [illegible]

# உதயன்

## போருக்கு தேவை காலஅட்டவணை

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அதிகாரப் பரவல் திட்டம்—அரசமைப்புத் திருத்தம்—எதிர்வரும் நவம்பர் மாதத்துக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விடும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்திருக்கிறார். கடந்த வாரம், தம்முடன் பேச்சு நடத்திய தமிழர் விடுதலைக் கூட்டணித் தூதுக் குழுவிடம் ஜனாதிபதி இந்தப் புதிய தவணையைத் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி கூறியதை நோக்கினால், அதிகாரப் பரவல் சட்ட நகலை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவும், அதனை நிறைவேற்றுவதில் உள்ள தடங்கல்களை எதிர்கொள்ளவும், பின்னர் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்குமென தமக்கெனச் சில திட்டங்களையும், கால அட்டவணைகளையும் அவர் வகுத்துள்ளதாகத் தெரிகின்றது.

அதிகாரப் பரவல் சட்ட நகலை, அதனோடு சேர்ந்த அரசமைப்புத் திருத்தத்தை, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் உத்தேச காலத்தை இதுவரை அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸே அடிக்கடி அறிவித்து வந்தார்.

அரசமைப்புச் சட்ட நகலை மே மாத இறுதியில் சமர்ப்பிக்க முடியும் என்று ஆகக் கடைசியாக அவர் சொன்னார். முன்னர் கூறிய பலப்பல தவணைகள் போலவே அதுவும் கடந்து போயிற்று; காற்றோடு போயிற்று.

அதிகாரப் பரவல் திட்டத்தை நாடாளுமன்றத் தெரிவுக்குழு இப்போது பரிசீலித்து வருகிறது.

இந்தப் பணிகள் பூர்த்தியாக, இன்னும் ஐந்து மாதங்களாவது செல்லும் என்று ஜனாதிபதி கணக்குப் போட்டிருக்கிறார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் கொண்டு வருவது பிந்திக் கொண்டிருக்கிறதாயினும் அதற்கென ஒருகால அட்டவணை வகுத்துச் செயற்படுவது நல்லது.

இனப்பிரச்சினை என்ற நாணயத்தின் மற்றொரு பக்கமான போர் மட்டும் கால அட்டவணை இன்றித் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அதனால் தமிழ் மக்களுடைய அவலங்கள் தொடர்கின்றன.

வவுனியா — கிளிநொச்சிப் பாதையை இராணுவம் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு மேலும் பல மாதங்கள் செல்லலாம். காலம் முக்கியமானதல்ல; எடுத்த காரியத்தை முடிப்பதே பிரதானம் என்று படை உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதனை ஊர்ஜிதம் செய்வதுபோல, போர் தொடரும் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அறிவித்துள்ளார்.

''இந்தப் போரைத் தொடர்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?'' என்று ஜனாதிபதி கூட்டணித் தூதுக்குழுவிடம் கேட்டிருக்கிறார். ஆனால் போர் தொடரப்போகிறது.

போரை மிக விரைவில் முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் ஜனாதிபதி ஒருகால அட்டவணையை வகுக்கக் கூடாதா? போரின் முடிவு உத்தேச அரசியல் தீர்வுக்கு முன்னரா, பின்னரா? மக்களுக்கு அது தெரியக் கூடாதா?

# வசிப்பிடங்களைச் சென்று பார்க்க வலி.வடக்கில் நாளை முதல் அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 3

வலி. வடக்கில் ஒன்பது கிராம சேவை அலுவலர் பிரிவுகளில் மீளக் குடியமர்வதற்கு பதிவு செய்துள்ளவர்கள் நாளை முதல் தமது வசிப்பிடங்களுக்குச் சென்று பார்த்துவர அனுமதிக்கப்படவுள்ளனர்.

தமது வசிப்பிடங்களைப் பார்வையிட்டு வீடு, வளவு, கிணறு என்பவற்றைத் துப்புரவு செய்து கொள்ள நாளை தொடக்கம் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4 00 மணி வரை அனுமதி வழங்கப்படுவதாக வலி. வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலக திட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பிரதான குடியிருப்பாளர்கள் தத்தமது அடையாள அட்டைகளுடன் காலையில் பிரதேச செயலகத்தில் சமுகமளித்து தங்கள் பிரிவு கிராம அலுவலர்களைச் சந்தித்த பின்னரே வசிப்பிடங்களுக்குச் செல்ல முடியும் என்றும்—

எனவே அதற்கு வசதியாக நேர காலத்துடன் அங்கு வருகை தருமாறும் சம்பந்தப்பட்டோர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வசிப்பிடங்களைச் சென்று பார்வையிட அனுமதி வழங்கப்பட்ட 9 கிராம அலுவலர் பிரிவுகளும் வருமாறு:-

மல்லாகம் மத்தி, மல்லாகம் வடக்கு, அளவெட்டி வடக்கு, அளவெட்டி மத்தி, அளவெட்டி கிழக்கு, கணேஸ்வரம், அளவெட்டி மேற்கு, தெல்லிப்பளை கிழக்கு, துர்க்காபுரம். (ஐ)

## படகுச் சேவை வழமைக்கு

'சமுத்திர தாரகை' படகு இனந் தெரியாதோரால் கடத்தப்பட்டதை அடுத்து தடைப்பட்டிருந்த நெடுந்தீவு—குறிகாட்டுவான் படகுச் சேவை மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளது.

தனியாருக்குச் சொந்தமான 'சுக்குவாட்டி' என்ற படகு அங்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது.

## குஜராத் மாநிலத்தில் தளம் அமைக்க புலிகள் முயற்சியாம்

கொழும்பு, ஜூன் 3

இந்தியாவில் குஜராத் மாநிலத்தின் கரையோரமாக அமைந்துள்ள குத்செளரசத்ர என்னும் சிறிய தீவில் தளம் ஒன்றை அமைக்க விடுதலைப் புலிகள் முயற்சித்து வருவதாக இந்தியாவில் வெளியாகும் வார இதழ் ஒன்றை மேற்கோள் காட்டி 'தினமின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அங்கு தளம் அமைப்பதற்கான முயற்சியை வெளிநாடுகளில் இயங்கும் இரகசிய அமைப்புகளுடன் இணைந்து விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வருவதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## நெடுந்தீவு கூ. சங்கத்தில் கொள்ளையிட முயன்றோரே பின்னர் படகைக்கடத்தினர்!

### கூட்டுறவு காவலர் அடித்துக்கொலை

நெடுந்தீவு, ஜூன் 3

நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்கும்இடையில்சேவையில் ஈடுபட்டிருந்த ''சமுத்திர தாரகை'' படகைக் கடந்த வெள்ளியன்று நள்ளிரவு கடத்திச் சென்றோர் அதற்கு முன்னராக நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கத் தலைமையகத்தில் இருந்து பணத்தைக் கொள்ளையிட முயன்றுள்ளனர்.

துப்பாக்கிகள் சகிதம் கூட்டுறவுச் சங்கத் தலைமையகத்துக்குள் புகுந்த நபர்கள் அங்குள்ள இரும்புப் பெட்டகத்தை உடைத்துப் பணத்தைக் கொள்ளையிட முயன்றபோது அங்கு கடமையில் இருந்த காவலர் அதனைத் தடுக்க முற்பட்டார் என்றும்—

அதனையடுத்து காவலாளியின் கைகளைக் கட்டி அவரது வாயினுள் துணியைத் திணித்து விட்டு அந்த நபர்கள் அவரை அடித்துக் கொலை செய்துள்ளனர் என்றும் தெரிய வந்துள்ளது.

கூட்டுறவுச் சங்கத்தில் இரவுக் காவல் கடமையில் இருந்த நா. ஆறுமுகம் (வயது 52) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

அதன் பின்னர் தட்டச்சு இயந்திரங்களை அபகரித்த கொள்ளையர்கள் ''சமுத்திர தாரகை''ப்படகைக் கடத்தியுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற வேளை அங்கு கடமையில் இருந்த மேலும் இரு காவலர்களும் கொள்ளையர்களால் தாக்கப்பட்டுள்ளனர்.

ஆயுதம் தரித்த நால்வர் இக் கடத்தலில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-111)

## போலி வீஸா,மோசடி: 14 அதிகாரிகள்கைது

கொழும்பு, ஜூன் 3

போலி ஆவணங்களைத் தயாரித்து இலங்கைத் தமிழர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் தொழிலில் ஈடுபட்ட கோஷ்டி ஒன்று தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் இரகசியப் பொலீஸார் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகளைக் கடந்த வெள்ளியன்று கைது செய்துள்ளனர்.

இவர்களுடன் சேர்த்து இது தொடர்பாக இது வரை கைது செய்யப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை 14 ஆகும். இவர்கள் அனைவரும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தையும் 'எயர்லங்கா' நிறுவனத்தையும் சேர்ந்தவர்களாவர்.

இவர்கள் பெருந்தொகையான பணத்தை அறவிட்டு இலங்கைத் தமிழர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு உதவி புரிந்தனர் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (ஐ-10)

## சூழல் தினக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 3

சூழல் தினத்தை ஒட்டி யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் தூய விஞ்ஞானப் பிரிவினர் ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பெளதீகவியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் அறிமுக உரையைப் பேராசிரியர் வி.நவரட்ணராஜா நிகழ்த்துவார்.

''சூழலைப் பேணுதலும் இயற்கை விவசாயமும்'' என்னும் தலைப்பில் முதுநிலை விரிவுரையாளர் இரா. சிவச்சந்திரனும், ''சூழல் மாசுபடுதலும் சுகாதாரக் கேடும்'' எனும் தலைப்பில் முதுநிலை விரிவுரையாளர் வைத்தியக் கலாநிதி சீ. எஸ். நச்சினார்க்கினியனும் ''அருகிவரும் உயிரினங்கள்'' என்ற தலைப்பில் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கமும் உரையாற்றுவர்.

# எண்ணத்திலும், பேச்சிலும் சத்தியம் இருந்தால் வாழ்க்கை மேம்படும்

### கல்விச் சிந்தனைக் கருத்தரங்கில் உரை

திருநெல்வேலி, ஜூன் 3

''மனமும் செயலும் ஒன்றாக இருக்க வேண்டும். எண்ணத்திலும், பேச்சிலும் சத்தியம் இருந்தால்தான் மனித வாழ்வு மேம்பாடு பெற முடியும். மனம் சாந்தி பெற—அமைதிபெற — சத்திய வழியில் நின்று செயற்பட வேண்டியது முக்கியமானது. இதனை சுவாமி விவேகானந்தர் பல்வேறு சந்தர்ப்பங்களில் அறுதியிட்டு கூறியுள்ளார்.''

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடப் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம். (நந்தி)

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம யாழ். கல்வி வலயம் ஒன்றுடன் இணைந்து நடத்திய ''சுவாமி விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகள்'' என்ற கருத்தரங்கில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். நல்லூர் கல்விக் கோட்ட பிரதிக் கல்வி பணிப்பாளர் எஸ். தானையா தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் கல்வி வலயம் ஒன்றைச் சேர்ந்த ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

பேராசிரியர் சிவஞானசுந்தரம் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

''இன்று மனித[illegible] கொடுக்க முடியாத அளவுக்கு விஞ்ஞானம் அபரிமிதமான வளர்ச்சியை, முன்னேற்றத்தை கண்டுள்ளது. கொம்பியூட்டர் ''சற்றலைற்'' எனப்படும் செயற்கைக்கோள் என்பன விஞ்ஞான உலகில் பல சாதனைகளை நிகழ்த்தி வருகின்ற போதிலும் மனித வாழ்வில் அமைதியும், சாந்தியும் ஏற்படவில்லை. விஞ்ஞான கண்டுபிடிப்புக்களில் முக்கிய நாடாக விளங்கும் அமெரிக்காவில் குடும்பவாழ்வு சீர் குலைவு, விவாகரத்துகள், போதைவஸ்துப் பழக்கம், தற்கொலை செய்தல் போன்ற பல அவலங்கள் அதிகளவில் இடம் பெற்று வருகின்றன.

அண்மையில் ஜப்பான் நாட்டில் பாடசாலை மாணவிகள் ''பொக்கற் மணி'' எனப்படும் கைச் செலவுக்காக பாலியல் நடவடிக்கைக்கு துணைபோவதாக செய்திகள் வந்துள்ளன. கல்வியின் நோக்கம் பரீட்சையில் சித்தி பெறுவது மட்டுமல்ல, உலகில் எவ்வாறு நாம் வாழ வேண்டும் என்பதையும் கற்றுத்தருவதாக கல்வி இருக்க வேண்டும். சுவாமி விவேகானந்தர் கூறியதற்கிணங்க ஆத்மீகம் பாடசாலை மட்டத்திலிருந்து ஊக்குவிக்கப்பட வேண்டும். சத்தியம், தர்மம், சாந்தி இவற்றின் உள்அர்த்தங்களை எமது மாணவ சமுதாயம் இளம் சந்ததி நன்கு [illegible] கல்லூரிகளில் போதனைகள் மேற்கொள்ளப்பட்டால் நல்ல பலன் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை -என்றார்.

ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்த ''சுவாமி விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகள்'' என்ற விடயம் பற்றி உரையாற்றினார்.

ஆத்மீகதானம் தான் உலகிலேயே சிறந்த தானம் நாயன்மார்கள், அரவிந்தர், ஆதிசங்கரர், ரமணமகரிஷி போன்றவர்கள் ஆத்மீக வழி நின்று செயற்பட்டவர்கள். யோகர் சுவாமிகள் காட்டிய வழியும் ஆத்மீக வழிதான்.

எமது சமய மரபுகளும் அதையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. தேவைகள் ஏற்படும்போது மகான்கள் அவதாரம் எடுக்கின்றார்கள். ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர் தாம் பெற்றிருந்த அருட்செல்வத்தை தாம் மட்டுமே அனுபவித்து இன்புறவில்லை. அதை சகலருக்கும் அகில உலகத்திற்கும் வழங்க வேண்டும் என்பதே அவர்களின் பேரவாவாகும்—என்று அவர் தனது உரையில் கூறினார்.

முன்னாள் அதிபர் நா. க. சண்முகநாதபிள்ளை, பிரதிக் கல்விப் பணிப்பாளர் வ. தானையா ஆகியோர் உட்படப் பலர் அங்கு உரையாற்றினர். (ஐ135)

## விசேட அ. அட்டை

வலிகாமம் தெற்கு, ஜூன் 3

இணுவில் மேற்கு (ஜே191) இணுவில் கிழக்கு (ஜே 189) ஆகிய இரு கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் இன்று செவ்வாய்க்கிழமை இணுவில் கிழக்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

குப்பிளான் வடக்கு (ஜே211) குப்பிளான் தெற்கு (ஜே210) ஆகிய இரு கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கான விசேட அடையாள அட்டைகளும் இன்று புன்னாலைக்கட்டுவன் சிவில் நிர்வாக அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும். (ஐ-152)

## நாளை

**வைகாசி 21**

புதன்கிழமை

திதி: சதுர்த்தசி பிற்பகல் 1.45 வரை;

நட்சத்திரம்: கார்த்திகை மாலை 5 30 வரை;

அமாவாசை விரதம்

சுபநேரம்: 4 22-5.52

ராகுகாலம்: 11 52-1 22

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு போதைவஸ்து: பாகிஸ்தான் கும்பல் கைது!

இஸ்லாமாபாத், ஜூன் 3

பாகிஸ்தானிலுள்ள பஞ்சாப் மாநிலம் பைசலாபாத் நகரில் ''சன்னா'' கோஷ்டி என்று அழைக்கப்படும் குழுவைச் சேர்ந்த பலர் இலங்கைக்கு போதைவஸ்துக்களை அனுப்பியவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் அந் நாட்டுப் பொலீஸாரால் கடந்த ஞாயிறன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தான் போதைவஸ்து ஒழிப்பு பொலீஸாரால் இக் கோஷ்டியினர் கைது செய்யப்பட்டனர்.

இந்தக்கோஷ்டியின் தலைவரிடமிருந்து போலிக் கடவுச்சீட்டுக்கள், ஆவணங்கள் ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு போதைவஸ்து கடத்தப்படுவதாக அண்மையில் இலங்கை அரசு அந்நாட்டிடம் தெரிவித்திருந்தது.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### வெளிவாரி பட்டப் படிப்புப் பதிவு 1996/97

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 1996/97 ஆம் கல்வியாண்டுக்குப் பின்வரும் கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வுநாடியாகப் பதிவுசெய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடம் இருந்து 02-06-1997 ஆம் திகதியிலிருந்து 30-08-1997 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. வர்த்தக முதற்கற்கை நெறி
2. கலை முதற்கற்கை நெறி
3. பொதுக் கலைமாணி பகுதி I
4. சிறப்புக் கலைமாணி பகுதி I
5. வர்த்தகமாணி பகுதி I

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக் கலைமாணி பகுதி I கற்கைநெறிக்குப் பதிவுசெய்து கொள்ளலாம்: இந்து நாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், மெய்யியல், அரசறிவியல், தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம்.

விண்ணப்பப் படிவங்களுக்குரிய விவரங்களை வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு அலுவலகத்தில் இருந்து நேரடியாகவோ தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.

★ விண்ணப்பப் படிவம் ரூபா 15. 00
★ பாடத்திட்டமும் விதிமுறைகளும் (முதற்கலை/ முதல் வர்த்தக நெறிகளுக்கானது) ரூபா 35. 00
★ பாடத்திட்டம் (சிறப்புக் கலைமாணி, வர்த்தகமாணி பகுதி I பாடநெறிகளுக்கு) ரூபா 50. 00
★ பாடத்திட்டம் (பொதுக் கலைமாணி பகுதி I ஒவ்வொரு பாடத்திட்டத்திற்கும்) ரூபா. 15. 00
★ விதிமுறைகள் - கைநூல் (சகல பகுதி I பாடநெறிகளுக்கும்) ரூபா. 25.00

விண்ணப்பப்படிவத்தினையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாகப் பெற விரும்புவோர் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கியில் உரிய தொகையைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். தபால் மூலம் பெற விரும்புவோர் தமது பாடநெறியை/ கற்க விரும்பும் பாடங்களைக் குறிப்பிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட உரிய தொகைக்கான காசுக்கட்டளை/ தபாற்கட்டளையுடன் சுய முகவரியிடப்பட்ட ரூ. 11/- பெறுமதி உடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 x 20 செ. மீ. அளவுடைய தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

(சி/857)



## எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக்கல்லூரி அருகில்)
411/1, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

### O/L DAY CLASS

| | | |
|---|---|---|
| கணிதம் | — | திரு. B. P. பாஸ்கரன் |
| விஞ்ஞானம் | — | திரு. இரா. செல்வவடிவேல் |
| வரலாறும் சமூகக்கல்வியும் | — | திரு. இரா. கணேஷ் |
| தமிழ் | — | திரு. T. ஆர்த்தீகன் |
| ஆங்கிலம் | — | திரு. T. சகாதேவன் |
| வர்த்தகம் | — | திரு. T. அரவிந்தன் |
| சமயம் | — | திரு. K. இராசலிங்கம் |

★ கணிதம் மேலதிக வகுப்பு மூலம் அடிப்படையில் இருந்து பாடத்திட்டம் பூர்த்தியாக்கப்படும்.
★ கணிதம் கடந்தகால 27 வினாத்தாள்களின் பகுதி I, பகுதி II வினாக்கள் அலகு ரீதியாக மீட்கப்படும்.

ஆரம்பம்: 04-06-1997 புதன்கிழமை
காலை 8-00 மணி

(47549)


# காய்ச்சலால் குழந்தை மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

மூன்றுநாட் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட குழந்தை அங்கு மரணமானது.

கோப்பாயைச் சேர்ந்த பாஸ்கரன் அச்சுதன் (வயது ஒன்றரை) என்ற ஆண்குழந்தையே உயிரிழந்தது. (ஐ-15)

## கிழக்கில் புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

அதன்படி நேற்றுக் காலை மட்டக்களப்பிலிருந்து பொலன்னறுவைக்குச் சென்ற வாகன அணி மாலையில் மட்டக்களப்பு நோக்கி திரும்பிக் கொண்டிருந்தது.

வாகன அணி செல்லும் நாள்களில் வழமையாக வழங்கப்படும் வீதிப் பாதுகாப்பு ஏற்பாடுகள் நேற்றும் செய்யப்பட்டிருந்தன.

வாழைச்சேனையிலிருந்து சுமார் இரண்டு கிலோமீற்றர் தொலைவில் உள்ள களுவன்கேணிச் சந்தியில் வீதி கண்காணிப்புப் பணியில் பொலீஸார் ஈடுபட்டிருந்தனர்.

நேற்று மாலை அந்தச் சந்தி வழியாக படையினரின் வாகனத் தொடர் அணி தாண்டிச் சென்றதை அடுத்து, அதுவரை அந்த வீதிப் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த பொலீஸார் வாழைச்சேனைப் பொலீஸ் நிலையம் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தனர்.

அப்போதே அவர்கள் மீது மறைந்திருந்த புலிகள் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகின்றது.

இத்தாக்குதலின் போது புலிகள் தரப்பில் ஏற்பட்ட சேதங்கள் குறித்துத் தகவல் ஏதும் வெளியாகவில்லை.

உயிரிழந்த ஒன்பது பொலீஸாரினதும் சடலங்கள் வாழைச்சேனை ஆஸ்பத்திரியில் இருந்து வாழைச்சேனை பொலீஸ் நிலையத்துக்கு நேற்றிரவு எடுத்துச் செல்லப்பட்டன. இன்று அங்கிருந்து அவை பொலன்னறுவைக்கு எடுத்துச் செல்லப்படும்.

(ஐ-உ-21)

## ஈழத் தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஒட்டு மொத்த ஆட்சேபத்தை வெளிப்படுத்தவும்—

இந்த ஹர்த்தாலை திராவிட கழகம் உட்பட முக்கிய பல கட்சிகள் முன்னின்று ஏற்பாடு செய்துள்ளன.

ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. க. மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி தி. மு. க. உட்பட பல பிரதான கட்சிகள் இந்த ஹர்த்தாலுக்கு முழு ஆதரவு தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஹர்த்தால் தொடர்பாக தி. மு. கவின் நிலைப்பாட்டை அக்கட்சியின் தலைவர் மு. கருணாநிதி நேற்று செய்தியாளர்களுக்கு வெளியிட்டார்.

தமிழ்நாட்டின் தற்போதுள்ள சூழ்நிலையில் முழுக் கதவடைப்பை மேற்கொள்ளுவதால் மக்களுக்கு வசதிக்குறைவு ஏற்படும் என தனது கட்சி கருதுவதாகவும்—

மாநிலத்தில் அன்றைய தினம் அமைதியைப் பராமரிக்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் எனவும்—

கருணாநிதி தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அந்த நாட்டு அரசு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவேண்டும் எனவும்—

தற்போது அங்கு நிலவும் சூழ்நிலை நீடிக்குமேயானால் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக இந்தியா வரும் சூழ்நிலை உருவாகும் என தமது கட்சியின் [illegible] கவலை தெரிவித்ததாகவும்—

அவர் மேலும் தெரிவித்தார். (உ-10)

# தென்மராட்சிக்கு புதிய பஸ் சேவை

தென்மராட்சி, ஜூன் 3

தென்மராட்சி சிற்றூர்தி சேவைகள் சங்கத்தினர் நாளை முதல் சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து தனங்களப்பு ஊடாக யாழ்ப்பாணத்திற்கும், யாழ். பஸ் நிலையத்திலிருந்து பளைக்கும் புதிய பஸ் சேவைகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

தினமும் காலை 8.00 மணிக்கு சாவகச்சேரியிலிருந்து புறப்படும் மினிபஸ் தனங்களப்பு தச்சன்தோப்பு, நாவற்குழி, ஊடாக யாழ்ப்பாணத்திற்குச் சென்று பி. ப. 2.00 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு இதே மார்க்கமாக சாவகச்சேரிக்கும்,

தினமும் காலை 8-00 மணிக்கு யாழ். பஸ் நிலையத்திலிருந்து சாவகச்சேரிஊடாகப் பளை நோக்கிப் புறப்படும் மினிபஸ் காலை 11-00 மணிக்குப் பளையிலிருந்து புறப்படும்,

கனகன்புளியடி ஊடாக சுன்னாகத்திற்கான பஸ் சேவையும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சங்கத் தலைவர் மெ. அற்புதராசா தெரிவித்தார். (ஐ-117)

## அ. அட்டைகள் வந்தன

நவாலி, ஜூன் 3

யாழ். மாவட்டத்திலிருந்து தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பம் செய்த பாடசாலை மாணவர்களினதும் ஏனையவர்களினதும் அடையாள அட்டைகள் யாழ். ஆட்பதிவுத் திணைக்களத்திற்குவந்து சேர்ந்துள்ளன. (ஐ-100)

# ஜப்பானிய முதலீட்டாளர் இங்கு வரப் பின்னடிப்பு!

## பாதுகாப்பு குறித்து அச்சம்

கொழும்பு, ஜூன் 3

''இலங்கையில் நடக்கும் யுத்தம் காரணமாக ஜப்பானிய முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்யத் தயங்குகிறார்கள்.''

ஜப்பான் வர்த்தக சம்மேளன நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹெசிமோட்டோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஜப்பான் வர்த்தக சம்மேளனத் தூதுக்குழுவின் தலைவராக வந்துள்ள இவர் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இத் தகவலைத் தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு விரைவில் முடிவு காணப்பட வேண்டும். இங்குள்ள பாதுகாப்பு நிலைதான் பெரும் கவலைதரும் விடயமாக உள்ளது.

பாதுகாப்பு இல்லாத இடமாக இருப்பதால் முதலீட்டாளர்கள் இங்குவர அஞ்சுகிறார்கள் என்று அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளில் ஜப்பான் முதலிடம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

வருடாந்தம் 40 கோடி ரூபா பெறுமதியான பொருள்களை ஜப்பான் இலங்கைக்கு ஏற்றுமதி செய்வதும் —

இலங்கையிடம் இருந்து 2 கோடி 80 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை இறக்குமதி செய்வதும் — குறிப்பிடத்தக்கது.

(ஐ-150-3)


மீண்டும் யாழ், நகரில்!
02-06-97 முதல்

புது மெருகுடன்

## ★★★ மைதிலி ★★★

## நகை மாடம்

190A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ நகைகள் குறித்த தவணையில் சிறந்த முறையில் புதுவிதமான வடிவமைப்புக்களில் செய்து கொடுக்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

[47575]



## MODERN EDUCATION CENTRE

KARAVEDDY.

### O/L

பகல் நேர வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன

★ நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
★ எமது வழமையான ஆசிரியர் குழு.

### A/L 99

கலை, வர்த்தகம்

புதிய பிரிவு ஆரம்பமாகிவிட்டது.

- நிர்வாகி.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03-06-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org